# பொங்கல் பண்டிகை விடுமுறையையொட்டி மெட்ரோ ரயில் பயணச்சீட்டில் 50% சலுகை

சென்னை, ஜன.13-

பொங்கல் பண்டிகை விடுமுறையையொட்டி, மெட்ரோ ரயில் பயணச் சீட்டில் 50 சதவீதம் கட்டண தள்ளுபடி வழங்கப் படும் என்று, சென்னை மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயிலில், பொது விடுமுறை நாள் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில், பாதி கட்டண சலுகைவழங்கப்படும் என்று, மெட்ரோ நிர்வாகம் ஏற்கனவே அறிவித் துள்ளது.

இந்நிலையில், தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை, வரும் 15, 16, 17 ஆகிய தேதிகளில் கொண் டாடப்பட உள்ளது. இதனையொட்டி, சென்னை மெட்ரோ ரயில் பயணச் சீட்டுகளில், 50 சதவீதம் கட்டண தள் ளுபடி வழங்கப்பட உள்ளது. பொது விடுமுறை நாள் என்பதால், கட்டண சலுகை வழங்கப்படுவதாக மெட்ரோ நிர்வாகம் தெரி வித்துள்ளது.

வரும் 17ம் தேதி காணும் பொங்கலை முன்னிட்டு, அரசினர் தோட்டம், டி.எம்.எஸ். ரயில் நிலையங் களில் இருந்து, மெரினா கடற்கரைக்கு சி.ஏ.பி. எனப் படும் மெட்ரோ சீருந்து இணைப்பு இயக்கப்படும் எனவும், காணும் பொங்கல் அன்று மெரினாவுக்கு அதிக அளவில் மக்கள் வருவார்கள் என்பதால், சி.ஏ.பி. இயக்கப்படுவ தாகவும் மெட்ரோ நிர் வாகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் இந்த வசதிகளை பயன் படுத்திக் கொள்ளுமாறு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.